# 2 நல்வாழ்வை முன்னிறுத்துவோம்

போட்டி நிறைந்த உலகில் நெருக்கடி மிகுந்த வாழ்க்கை அனுபவத்திற்கு மனிதன் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. விஞ்ஞான தொழினுட்பத்தின் துரித முன்னேற்றம் மனிதத்தேவைகளின் பெருக்கம் என்பன இந்நிலையை தீவிரமாக்கிக்யுள்ளன. ஒத்துழைப்பின்மை, நன்மை, தீமை விளங்கிக் கொள்ளப்படாமை என்பன தற்கால சமூகத்தை பிரச்சினைக்குள்ளாகியுள்ளன. எனவே தனியாள் வேறுபாடுகளான விருப்பங்கள், எதிர்பார்ப்புக்கள் அவசியம் விளங்கிக் கொள்ளப்படுவதுடன் நல்வாழ்வுக்கான குணநலன்கள் பின்பற்றப்பட வேண்டும். மனோரம்யமிக்க சுமூகமான சமுகப் பின்னணியொன்றை ஏற்படுத்த ஒவ்வொருவரும் பின்பற்றவேண்டியவை நல்வாழ்வுக்கான குணநலன்கள் எனப்படுகின்றன. மகிழ்ச்சியாக வாழ்தல், திருப்தியுடன் வாழ்தல், எளிமையாக வாழ்தல், இணக்கமாக வாழ்தல், சமநிலை ஆளுமையுடன் வாழ்தல் என்பன இவற்றுள் பிரதானமானவையாகும். நல்வாழ்வுக்கான குணநலன்கள் பின்பற்றப்படாவிட்டால் ஏற்படும் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளவும் அவற்றை நல்வாழ்வுக்கான குணநலன்களுடன் எதிர்கொள்ளவும் இவ்வத்தியாயம் உங்களுக்கு வழிகாட்டும்.

மாத்தளை மகா வித்தியாலயத்தின் ஆசிரியை பூரணி பாடசாலையின் முதலாம் தவணையின் முதல் வாரத்தில் தரம் 9இன் பிள்ளைகளை ஒன்று சேர்த்து, புதிய செயற்பாடொன்றுக்கு அடித்தளம் இட்டார். அதாவது, வாழ்க்கைத் தேர்ச்சியும், குடியுரிமைக் கல்வியும் எனும் பாடம் தொடர்பாக, மாதாந்த சுவர்ப் பத்திரிகையொன்றை வெளியிடுவதே இச்செயற்பாடாகும். ஒவ்வொரு மாதமும் ஆசிரியையால் கொடுக்கப்படும் தலைப்பிற்கிணங்க கட்டுரை, ஆக்கம், தொகுப்பு, புகைப் படம் போன்றவற்றை மாணவர்கள் சுவர்ப்பத்திரிகையில் வெளியிட வேண்டும்.




உரு 2.1

இச்சுவர்ப்பத்திரிகை ‘‘சிந்தனைத் திறன்’’ எனப் பெயரிடப்பட்டதோடு, சுவர்ப்பத்திரிகையின் சஞ்சிகைக் குழுவிற்கு ஐந்து மாணவர்கள் தெரிவு செய்து நியமிக்கப்பட்டனர்.

நல்வாழ்வுக்குத் தேவையான குணாம்சங்கள் பலவற்றைக் கரும்பலகையில் எழுதிய ஆசிரியை, இக்கருத்துக்கள் வெளிப்படும் வகையில் இம்முறை சுவர்ப் பத்திரிகைக்கு ஆக்கங்களை வழங்குமாறு, மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

ஆசிரியையின் அறிவுறுத்தல்களுக்கேற்ப, ஒரு வாரத்தின் பின் சகல மாணவர்களும் ஆக்கங்களைச் சமர்ப்பித்தனர். ஆசிரியையும் சஞ்சிகைக் குழுவினரும் ஒன்றிணைந்து சுவர்ப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காகத் தெரிவு செய்த ஆக்கங்களுட் சில இவ்வத்தியாயத்தில் இடம்பெறுகின்றன.

**ஆக்கம் 1**

## முன்மாதிரியான மேதை ஒருவர்

நல்வாழ்விற்குரிய குணாம்சங்களை பின்பற்றாமையினால் ஏற்படும் நிலையையும், எளிமை, தாழ்மை, தாராள மனப்பான்மை போன்ற குணாம்சங்களைப் பின்பற்றாமையினால் ஏற்படும் நிலமையையும் எமக்குத் தெளிவாக விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் உண்மைச் சம்பவம் ஒன்றை மையமாகக் கொண்ட கதையொன்று (வண ஹெட்டியாகல இலரத்ன தேரரினால் ‘‘**உயரிய நற்பண்பு**’’ எனும் தலைப்பில் எழுதப்பட்டது) இங்கு இடம் பெறுகிறது.

இந்தியாவில் வங்காளத்தில் மக்களின் அபிமானத்தை வென்ற ‘ஈஸ்வர சந்திர வித்தியாசாகர’ எனும் பெயருடைய பேரறிஞர் ஒருவர் வாழ்ந்தார். அன்னார் இளமைக் காலம் தொட்டு தான் யார் என நன்கு தெளிவு பெறுவதற்கு முயற்சித்தார்.

படிகளின் மீது ஒவ்வொன்றாக மேலேறிச் செல்வது போன்று, படிப்படியாக சமூகத்தின் உயர் நிலையை அடைந்து, தான் ஆரம்பத்தில் கல்வி கற்ற கலாசார கல்வி நிலையத்திலேயே அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். பின்னர் அவர், வங்காளத்தில் கலாசார கல்வி நிலையங்களின் பரிசோதகராக நியமனம் பெற்றார்.


இலவச பாடநூல் விநியோகத்திற்காக